**சிசி.146/2018 அசா.6 சிவநாதன் த.பெ.ஆறுமுகம் தேதி 04.10.2023**

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

***எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை***

அசா.1 ராணி எனது உறவினர். அசா.1 ராணியும் எதிரி புண்ணியமூர்த்தியும் திருமணத்திற்கு பின்னிட்டு சேர்ந்து சென்னையில் சந்தோசமாக குடும்பம் நடத்திவந்த விபரம் எனக்கு தெரியும். அசா.1 ராணி தனது கணவரான எதிரி புண்ணியமூர்த்திக்கு சொந்தமான இடத்தினை தனது பெயருக்கு எழுதிவைக்கசொல்லி எதிரி புண்ணியமூர்த்தியிடமும் புண்ணியமூர்த்தியின் தாயாரிடமும் கேட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அசா.1 ராணியின் பெயருக்கு இடம் எழுதிவைக்காததால் அசா.1 ராணியின் தகப்பனார் சென்னைக்கு சென்று அசா.1 ராணியை தனது ஊருக்கு அழைத்துவந்துவிட்டார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அசா.1 ராணியும் 1 வது எதிரியும் சேர்ந்து வாழ பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் அசா.1 ராணியின் தகப்பனார் சொல்லி தெரியும். பேச்சுவார்த்தையின்போது அசா.1 ராணியின் பெயருக்கு சொத்தினை எழுதிவைக்க கேட்ட விபரத்தினை அவரது தகப்பனார் என்னிடம் சொன்னார் என்றால் இல்லை.

2. பேச்சுவார்த்தைக்கு பின்னர் அசா.1 ராணி தனது தகப்பனார் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அதன்பின்னர்தான் 1 வது எதிரி விவாகரத்துகோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் அசா.1 ராணி எதிரிகள் மீது ஆலங்குடி மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகார் அளிக்க அசா.1 ராணியுடன் நானும் உடன் சென்றேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து பேச்சுவார்த்தை நடத்தியபோது 1 வது எதிரியுடன் அசா.1 ராணி சேர்ந்துவாழ மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல, அவ்வாறு மறுக்கவில்லை. அசா.1 ராணி தனது புகாரில் என்ன கூறியிருந்தார் என்று எனக்குதெரியாது என்றால் சரிதான். புகார் அளித்த அன்று போலீசார் அசா.1 ராணியை மட்டும் விசாரித்தனர் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அதன்பின்னர் நான் இந்த வழக்கு சம்மந்தமாக காவல்நிலையம் செல்லவில்லை என்றாலும் என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான்.

3. எனது முதல்விசாரணையில் சொன்னதுபோல் 05.12.2017 அன்று 1 வது எதிரி நீலா என்ற பெண்ணை 2 வது திருமணம் செய்துகொள்ளவில்லை என்றாலும் வேறு எந்த பெண்ணையும் 1 வது எதிரி 2 வது திருமணம் செய்துகொள்ளவில்லை என்றாலும் வழக்கிற்காக 1 வது எதிரி 2 வது திருமணம் செய்துகொண்டதாக சாட்சியளிக்கிறேன் என்றால்

சரியல்ல. அசா.1 ராணி எதிரி குடும்பத்தை பழிவாங்கவேண்டும், எதிரியின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கொடுத்த ஜோடிக்கப்பட்ட பொய்க்கு ஆதரவாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

***மறுவிசாரணை இல்லை***